# ஆனையிறவை 'யுத்தசூனிய' பகுதியாக்கிய பின்பும் இராணுவம் தொடர்ந்து ஷெல், துப்பாக்கிச் சூடு!

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 25 இதழ் 243
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 11 — 10 — 1992

(பளை)

ஆனையிறவு பகுதியை தாக்குதலற்ற ஒரு பிரதேசமென அரசு அறிவித்துள்ள போதிலும் தொடர்ந்தும் கடந்த சில தினங்களாக ஆனையிறவு முகாமிலிருந்து ஷெல் தாக்குதலும், துப்பாக்கிச் சூடும் நடைபெற்றுவருகின்றன

(4-ம் பக்கம் பார்க்க)

## இளாலி நோக்கி பீரங்கி, ஷெல் தாக்குதல்

(பளை)

பூநகரி முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு இளாலி கடற்கரையை நோக்கி பீரங்கி ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. சில மணிநேரம் இத்தாக்குதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. யுத்த

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்குதல் சிப்பாய் பலி

(வவுனியா)

வவுனியா கணேசபுரம் இராணுவ காவலரண் மீது நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அருகி-8∂

4ம் பக்கம் பார்க்க)

★ புலிகளின் தாக்குதலின் எதிரொலி

# இராணுவ தலைமைப்பீடத்தில் மீண்டும் பாரிய மாற்றங்கள்

## ஹமில்டனிடம் சகலதும் ஒப்படைப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவ தலைமை கட்டமைப்பை அரசு பாரிய அளவில் மாற்றியமைத்துள்ளது. இதன் முதற்கட்டமாக வடக்கு-கிழக்கு இராணுவ நடவடிக்கைகளின் பொறுப்பு மீண்டும் கூட்டுப்படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன்படி வடக்கு-கிழக்கு திட்டமிடுவது, இராணுவ நடவடிக்கைகளைத் நடைமுறைப் படுத்துவது அவற்றை ஆகியவற்றின் முழுப்

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாவில் இராணுவம் நடவடிக்கையைக்குறைக்கும்?

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இராணுவம் தனது இராணுவ நடவடிக்கையை குறைக்க இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மன்னார், பணலாறு, மட்

4-ம் பக்கம் பார்க்க)

★ அரசியல் கட்சிகளுடன்

## இணைப்பு குறித்து தனித்தனியே சந்திப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இணைப்பு விவகாரம் தொடர்பாக தெரிவுக் குழுவின் தலைவர் திரு. மங்கள முனசிங்க அரசியல் கட்சித் தலைவர்களை தனித் தனியாக சந்தித்து பேச்சுக்களை நடாத்தி வருகிறார்.

இப்பேச்சுக்கள் 14 ந் திகதி புதன்கிழமையுடன் முடிவடையும் எனவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு இணைப்பின்றி பிரச்னைக்கு தீர்வில்லை என தமிழ்க்கட்சிகளும் இணைப்பை ஆளும்கட்சியும் முக்கிய எதிர்க்கட்சிகளும் எதிர்த்து வரும் இதேவேளை முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு உறுதியளிக்கப்பட்டால் இணைப்பை ஆதரிப்பதாக முஸ்லிம் காங்கிரசும் கூறியுள்ளன.

(சி)

## வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

மணலாறில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தவறுதலான வெடி விபத்தில் வீரவேங்கை திலகரன் (சிந்தாமணி அம்பிகைபாகன் - கிளிநொச்சி) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட திலகரனுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர்.

(கு)

## செவ்வாய் தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

குமாரி கப்பலில் கொண்டுவரப்பட்ட 547 தபால் பொதிகளும் செவ்வாய்க்கிழமை முதல் விநியோகம் செய்யப்படுமென்று யாழ். தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(வி-56)

## போரை தொடர்வதற்கே இராணுவத்தில் மாற்றங்களை அரசுஏற்படுத்துகிறது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தப்போரை தொடர்ந்து முனைப்புடன் நடத்தும் நோக்கிலேயே அரசு இராணுவ கட்டமைப்பில் புதிய மாற்றங்களை செய்துள்ளதாக 'அரசியல் அவதானிகள்' கூறியுள்ளனர்.

புலிகளிடம் படையினர் தோல்விகளை சந்தித்துவரும் இவ்வேளையில் புதிய மாற்றங்கள் போரின் விளைவில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென அரசு எதிர்பார்க்கிறது.

இதற்கிடையில் புலிகள் ஆயுதங்களை கைவிடும்வரை

(4ம் பக்கம் பார்க்க)

## பிரச்னையைத் தீர்க்க அரசு விரும்பவில்லை 'இந்து' கண்டனம்

(சென்னை)

இலங்கை இனப்பிரச்னைக்கு விரைவில் ஒருதீர்வைச் காண்பதில் அரசுக்கு அக்கறை இல்லையென 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீர்வைக்காணுமாறும், போரை முடிவுக்கு கொண்டு

4ம் பக்கம் பார்க்க)

## மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைக் கடலில் கடந்த வியாழக்கிழமை பகல் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவரின் படகுகள்மீது கடற்படையினர் தாக்குதலை மேற்கொண்டனர்.

தாக்கப்பட்ட நிலையில் மீனவர்கள் தப்பி வந்துசேர்ந்தனர். படகுகளின் எட்டுகுதிரைசக்தி கொண்ட 'அவுட்மோட்டார்' இயந்திரத்தினை கழற்றி கடற்படையினர் கடலில் போட்டுவிட்டு மீனவர்களை எச்சரிக்கை செய்து அனுப்பினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமையும்

(4ம் பக்கம் பார்க்க)

# இளாலி கடலில் சுட்டுக்கொல்லப்பட்ட ஐவரது சடலங்களும் கரை ஒதுங்கின

(பளை நிருபர்)

இளாலி கடற் பரப்பில் கடற்படையினரால் கடந்த வியாழக்கிழமை அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்ட ஐந்து பயணிகளினதும் சடலங்கள் நேற்று புலோப்பளை, அல்லிப்பளைப் பகுதியில் கரையொதுங்கியுள்ளன.

புலோப்பளை கடல் எல்லையில் மூன்று ஆண்களின் சடலங்களும் அல்லிப்பளைக் கடல் எல்லையில் ஒரு பெண்ணின் சடலமும் ஒரு சிறுவனின் சடலமும் கரை ஒதுங்கின.

சடலங்களின் எல்லாவற்றிலும் துப்பாக்கிசூட்டு காயங்கள் காணப்பட்டன. சடலங்களின் கைகள் அனைத்தும் உயர்த்திய நிலையில் காணப்படுகின்றன

சடலங்கள் அனைத்தும் உருக்குலைந்த நிலையில் அடையாளம் காணமுடியாத அளவுக்கு இருந்ததை காணக்

(4-ம் பக்கம் பார்க்க)

## வாய்க்கால் நீர் தனையும் வாய்ப்பாக்கி தேக்கிடுவீர்

## வரி விளம்பரம்

### சித்திராலயா இடமாற்றம்

இதுவரை காலமும் கோவில் வீதி, நல்லூரில் இயங்கி வந்த எமது நிறுவனம் 5-10-92 திங்கள் முதல் ஸ்ரான்லி வீதியிலுள்ள பழைய இடத்தில் இயங்குகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
(சி-6863)

### குறைந்த சலார் குறித்த நேரம் தரன் ஸ்ருடியோ

தீபாவளித் தினத்தை முன்னிட்டு 9-10-92 — 27-10-92 வரை சகலவித போட்டோ மற்றும் வேலை கட்டு, 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி-6878)

### ஆண்டு 5 புலமைப்பரிசில்

ஆண்டு 4ல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் 993 மாதிரிப்பரீட்சை 11-10-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 11-00 நடைபெறும். அண்மையில் எமது நிறுவனத்தால் வெளியிடப்பட்ட துரித மீட்டற் பயிற்சியையும், மாதிரி வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-6875)

### ஆண்டு 6 அனுமதி

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 மாதிரித் தேர்வு 11-10-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 11-00 நடைபெறும் மாதிரி வினாத் தாள்களையும், அண்மையில் வெளியிட்ட மாதிரிப் பயிற்சியையும் (விடைகளுடன்) பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-6876)

### தேவை

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலயத்துக்குத் தொண்டு மனப்பான்மையும், இறைபக்தியும், சமய ஒழுக்கம் உள்ளவரும், ஆலயத்துக்கு ஒரு மைல சுற்றுடலில் வசிப்பவருமாகிய ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும். செயலாளருடன் தொடர்பு கொள்ளவும். ஓய்வு பெற்றவர் விரும்பத்தக்கது. தனியாளுக்கு தங்குவதற்கு இடமுண்டு. பரிபாலனசபை, கோண்டாவில்.
[சி 6881]

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## உதைபந்தாட்ட சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் 50-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் கொய்யாத்தோட்டம் ஐக்கிய கழகம் சாம்பியனாகியது.

கொய்யாத்தோட்டம் ஐக்கிய கழகத்துக்கும், ஜெற்லையினஸ் கழகத்துக்குமிடையில் அண்மையில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கொய்யாத்தோட்டம் சிறப்பாக விளையாடி வெற்றிபெற்றது.

இப்போட்டிக்கு கப்டன் குணசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார். (வி)

# ஐ. நா. மனித உரிமைக்குழு மட்டக்களப்பு விஜயம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு நேற்று முன்தினம் விசேட விமானம் மூலம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தது.

இக்குழு மட்டக்களப்பு சிறைச்சாலைக்குச் சென்று தடுப்புக்காவலில் உள்ளோர் பற்றிய விபரங்களையும், அவர்களது வசதிகள் பற்றியும் ஆராய்ந்தது.

திரு. லாண்ட்பென் ஜோன் தலைமையில் வந்த இந்தக்குழு மட்டக்களப்பு கத்தோலிக்க மண்டபத்தில் மட்டு சமாதானக் குழுவையும் சந்தித்தது. (இ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி

இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 1991

மேற்குறிப்பிட்ட பரீட்சை நவம்பர் மாதம் 21ம், 22ம், 28ம், 29ம் திகதிகளில் நடைபெறும். மீள் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கிளையில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து தகுந்த கட்டணப் பற்றுச் சீட்டுடன் 23.10.92க்கு முன்பாக சமர்பிக்கவும்.

பதிவாளர்
(எ-2497)

## இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மனோன்மணி அம்மன் ஆலயத்தில் இன்று மாலை 6-00 மணிக்கு நாவலருழி எஸ். நாகராஜாவின் இசைக் கச்சேரி இடம்பெறும்.

★ ★ ★

(அரியாலை)


யாழ். மத்திய கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்ப மாணவர்களின் ஆண்டு-1 நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது. (59)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 39வது வருடாந்தப் பொதுக் கூட்டம், இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. சு. பாஸ்கரன் தலைமையில் நடைபெறும்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### திருமதி திலகவதி லோகநாதன்

மலர்வு: 16-10-1958 உதிர்வு: 23-10-1991

திதி: 11-10-1992

பெற்றோர்க்கு குலமகளாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
ஊரார்க்கு நல்மகளாய்
வாழ்ந்திட்டாள் திலகவதி.
நோயுற்ற வேளையிலும்
கணவனுக்கு துணைபுரிந்து
பாசமுள்ள சேய்களுக்கு
நிறைவான அமுதூட்டி
பெற்றோரை மற்றோரை
எக்கணமும் அரவணைத்து
தேடிவந்தோர் அனைவரையும்
சோதரராய் நீ மதித்து
தேனொழுக பேசிநின்றாய்.
ஓராண்டு சென்றாலும்
உந்நாமம் எந்நாளும்
எம் இதயம் மறவாது.

ஓராண்டில் நினைவு கூரும்

இ. லோகநாதன் (கணவன்),
கௌசலியா, சுமன், சுமணன், சுகர்ணன்.
(பிள்ளைகள்)
பெற்றோர், சகோதர – சகோதரிகள்.
மைத்துனர், மைத்துனிகள்.
உற்றார், உறவினர், நண்பர்கள்.

மலையந்தோட்டம்,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.
(சி 6871)

# விநாயகர் தரும நிதியம் 192 மாணவர்க்கு பரிசளிப்பு

(உடுப்பிட்டி)

புலோலி மேற்கு விநாயகர் தரும நிதியத்தினரால் நடாத்தப்பட்ட அறநெறிப் போட்டிப் பரீட்சையில் பங்குபற்றிய பாடசாலை மாணவர்களில் 28 பேர் முதற்பரிசினையும், 71 பேர் இரண்டாம் பரிசினையும், 93 பேர் மூன்றாம் பரிசினையும் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில்கள் அந்தந்த பாடசாலைகளில் வைத்து விஜயதசமி அன்று வழங்கப்பட்டன. ஆகக் கூடிய பரிசுத் தொகைகளை முறையே பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலை, பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரி என்பன பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிறுவனம் அண்மையில் சிறுவர்களுக்கான காலாண்டு இலவச வெளியீடுகளை வெளியிடுவதோடு மாதாந்தம் இலவசப் புத்தகங்களையும் வெளியிட்டுவருகிறது.

இத்தரும நிதியம் மேற்படி பரிசில்களுக்கென 90,000 ரூபாவை செலவிட்டுள்ளது. மற்றும் அகதிகள், ஊனமுற்றோர் வறியவர்களுக்கு இலவசமாக அரிசி வழங்கி வருகிறது.

குறிப்பாக வடமராட்சி மற்றும் பகுதி அகதிகள் ஏழைகளுக்கும் அதிகளவில் பயன்படும் வகையில் இத்தரும நிதிய நிறுவனர் திரு. ஆ. சி. முருகுப்பிள்ளை செயற்பட்டு வருகிறார். (150)

## கலந்துரையாடல்

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டக் கல்வி அபிவிருத்திக் கழக ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று, எதிர்வரும் 14ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் கழகத் தலைவர் திரு எஸ். வி. மகேசவேலு தலைமையில் நடைபெறவுள்ளது.

கழக ஆசிரியர்களின் முக்கிய விடயங்கள் பல இங்கு ஆராயப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (139)

# செய்திச்சுருக்கம்

### கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேசச் செயலர்கள் பிரிவுகளில் செயற்பட்டுவரும் அகதி முகாம்களின் பொறுப்பாளர்களுக்கான கருத்தரங்கு ஒன்று, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கடந்த மாதம் 30ம் திகதி புதன்கிழமை நடைபெற்றது. (72)

### வினா விடைப் போட்டி

(நல்லூர்)

யூனிசெப் உதவியுடன் யாழ். மாநகராட்சி மன்றப் பிரதேசத்திற்கு உட்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையே சுகாதாரம் சம்பந்தமான வினா விடைப் போட்டி ஒன்று. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது. (158)

### வீட்டுத் தோட்ட போட்டி

(கொழும்புத்துறை)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட இடங்களில் "யுனிசெப்" நிறுவனம் கடந்த வருடங்களைப் போன்று இவ்வருடமும் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கைப் போட்டியை நடாத்தவுள்ளது. (154)

### சீனி விநியோகம்

(அரியாலை)

யாழ் நகரிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் பங்கீட்டு அட்டைக்கு ஒரு கிலோ சீனி வீதம் கட்டுப்பாட்டு விலைக்கு விற்கப்படுகிறது. (59)

### மரம் நாட்டு விழா

(நெல்லியடி)

வடமராட்சிக் கோட்டப் பாடசாலைகளின் மரம் நாட்டும் வைபவம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன், கடந்த 5ம் திகதி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில், வடமராட்சிக் கோட்டப் பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை ஆரம்பித்து வைத்தார். (160)

### நவராத்திரி விழா

(பண்டத்தரிப்பு)

யாழ். பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையில் நவராத்திரிவிழா பணிப்பாளர் டாக்டர் பொ. இரத்தினசபாபதி தலைமையில் கொண்டாடப்பட்டது.

### நூல்கள் அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

மிருகவில் துர்க்கா இந்து இளைஞர் மன்றத்தின் ஆண்டு விழாவிற்கு பரிசில் வழங்க மில்க்வைற் தொழிலகத்தினர், தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானத்தினர் சரசாலை இந்து இளைஞர் மன்றத்தினர் ஆகியோர் நூல்களை அன்பளிப்பு செய்தனர். (154)

### மாணவர்களுக்கு இடவசதி

(தாளையடி)

வடமராட்சி கிழக்கில் இடம் பெயர்ந்து வந்து தங்கியுள்ள மாணவர்கள் கல்வி பயில்வதற்கு இப்பகுதிப் பாடசாலைகளில் இடவசதி போதாமல் இருந்தது. இது பற்றி கல்வித் திணைக்களம் யாழ். அரசாங்க அதிபர் ஆகியோருடன் தொடர்பு கொண்டதற்கிணங்க யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்பு பகுதியினர் ஆறு தற்காலிக பாடசாலைக் கொட்டகைகளை அமைத்துக் கொடுத்துள்ளனர். (163)

### பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

சதாவதானி கதிரைவேற்பிள்ளை ஐக்கிய நாணய இக்கனச் சேமிப்புச் சங்கமும், சதாவதானி கலாமன்றமும் இணைந்து நடத்திய கலைவிழாவும், பரிசளிப்பு விழாவும் மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் திரு. ச. விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது. (52)

### நேர்முகப் பரீட்சை

(திருநெல்வேலி)

யாழ். பல்கலைக்கழகச் சித்த மருத்துவப் பிரிவுக்கான (91-92) கல்வியாண்டு மாணவர்க்கான அனுமதி நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 20ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (157)

### ஆட்சிக் குழு கூட்டம்

(வேலணை)

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையின் ஆட்சிக்குழுக் கூட்டம் ஒன்று இன்று 11-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இல. 33, பருத்தித்துறை வீதியிலுள்ள கட்டடத்தில் கிளைத் தலைவர் திரு ஆ. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும். (75)

# இனஒதுக்கல்கொள்கைக்காகதெ.ஆபிரிக்கதலைவர் கிளார்க் மன்னிப்புக்கோரி வருத்தம் தெரிவித்தார்

(ஜொஹான்ஸ்பேர்க்)

இனஒதுக்கல் கொள்கைக்காக தென் ஆபிரிக்கத் தலைவர் எச். டபிள்யூ டெகிளார்க் மன்னிப்புக்கோயிருக்கிறார்.

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த வெள்ளையர் தலைவர் ஒருவர் இவ்வாறு மன்னிப்புக்கேட்பது இதுவே முதல் தடவையாகும்.

விம்பிர்க்கின் மத்திய நகரில் நேற்று முன்தினம் இரவு பேசுகையில் டெகிளார்க் கூறியதாவது தனி தேசிய இனநாடுகளுக்கான கோரிக்கையில் வெற்றிகாண முடியாது என்பதை ஏற்கனவே அறிந்திருந்தும் கூட ஆளும் கட்சி நீண்டகாலமாக இந்த நோக்கில் கனவு கண்டிருக்கிறது. இதற்காக நாம் வருத்தப்படுகிறோம்.

1989ம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபின் சட்டப்பூர்வமான இன ஒதுக்கலுக்காக முன்னதாகமன்னிப்புக்கோர மறுத்து விட்டார்.

பேராயர் டெஸ்மான் ரூட்டு உட்பட வெள்ளையர் அல்லாத பலர் இன ஒதுக்கலுக்கு மன்னிப்புக்கோருமாறுவற்புறுத்தி வந்தனர். (இ)

## ★ படையினர் கட்டுப்பாட்டிலுள்ள நோயாளிகள் வெளியேற இராணுவம் புதிய கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

வலி-வடக்கு. மேற்குப் பகுதியில் இராணுவத்திடம் சிக்கியுள்ள நோயாளிகளை மீட்க அவர்கள் ஏற்கனவே சிகிச்சை பெற்று வந்ததற்கான மருத்துவச் சான்றிதழ்களை சமர்ப்பிக்குமாறு இராணுவம் கேட்டுள்ளதாம்.

எனவே பிற்பகுதியில் இருக்கும் உறவினர்கள் இந்த மருத்துவச் சான்றிதழ்களை அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறும்,

இந்த மருத்துவ சான்றிதழ்களை இராணுவத்திடம் காண்பித்து நோயாளிகள் அனுமதி பெற்றால் மாத்திரமே அவர்களை இங்கு அழைத்துவர முடியுமென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (159-சி)

## அகதிகளைத் திருப்பி அனுப்புவது இடைநிறுத்தம்

(சென்னை)

தமிழகத்திலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பிஅனுப்புவதைஇந்தியா மீண்டும் இடைநிறுத்தி வைத்துள்ளது.

தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் பணியை இந்தியா எப்போது ஆரம்பிக்கும் என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது

எனினும் எதிர்வருடம் ஜனவரி மாதத்துக்குப் பின்னரே அகதிகளைத் திருப்பி அனுப்பும் பணியை இந்தியா மீண்டும் ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

## இடப்பெயர்ந்த 100 குடும்பங்களுக்கு உடுதுணிகள் விநியோகம்

(மானிப்பாய்)

மானிப்பாயிலுள்ள அகதிகளுக்கு யாழ். நகர மத்தியிலுள்ள ரோட்டரிக் கழகத்தினால் நேற்று உடுபுடவைகள் வழங்கப்பட்டன.

வலி. மேற்கிலிருந்து இடம் பெயர்ந்து வந்து மானிப்பாய் அதிகார் செல்லமுத்து வீதி முகாமிலும், கல்லூரி முகாம் இரண்டிலும்தங்கியுள்ள சுமார் 100 குடும்பங்களுக்குத் தலையணைகள், சேலைகள், பெட்சீற்றுகள், பிள்ளைகளுக்கான உடைகள் என்பவற்றையும் வழங்கினார்கள். (71)

## "வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஜனாதிபதி முயற்சி எடுத்துள்ளார்"

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் நடைபெற்றுவரும் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவர ஜனாதிபதி பிரேமதாஸா முயற்சி எடுத்துவருகிறார்.

வடமேல்மாகாண முதலமைச்சர் திரு. காமினி ஜயவிக்கிரம பெரேரா அண்மையில் கல்குடாவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த வைபவத்தில் அவர் மேலும் கூறியதாவது;

நாட்டில் நீண்டகாலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் உள்நாட்டுப் போரை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இனப்பிரச்னைக்கான தீர்வு ஒன்றை நோக்கி ஜனாதிபதி நெருங்கிக் கொண்டிருக்கிறார்.

சகலரும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் ஒரு தீர்வை முன்வைத்து நாட்டின் சகல மாவட்டங்களையும் அபிவிருத்தி செய்வதே ஜனாதிபதியின் நோக்கமாகும் என்றார். (இ)

## ஒய்வூதியர்கள் விபரம் சமர்ப்பிக்கக் கோரிக்கை

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஓய்வூதியம் பெற்று வருபவர்கள் இது சம்பந்தமான விபரங்களைத் தத்தமது பகுதிக் கிராம சேவையாளர்களிடம் உடன் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான சகல வேலைகளும் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் சகல பிரதேச செயலகங்களுக்கூடாகவும் வழங்கப்படவுள்ளதாலேயே இதற்கான விபரங்கள் திரட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (71)

## "பிரச்னையைத் தீர்க்க ஜனநாயக வழியைத்தவிர வேறு வழியில்லை" ஜனாதிபதி

(கொழும்பு)

பிரச்னைகளைத் தீர்ப்பதில் ஜனநாயக வழியைத்தவிர வேறு சிறந்த வழிகள் இல்லை.

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு சரசவிபாயாவில் நடைபெற்ற வைபவத்தில் அவர் பேசுகையில் கூறியதாவது:

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்வது நல்ல முறையாகும். தேர்தல்கள்மூலம் மக்கள் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்தி பிரச்னைகளை தீர்த்துக் கொள்ளக்கூடிய நிலையில் இருக்கும்போது ஆயுதம் பாவித்து நாம் ஏன் தீர்த்துக் கொள்ளவேண்டும்

எனவே தான் நான் முன்பு புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குப் போனேன் என்றார்.

## தற்காலிக எழுதுவினைஞர்களாக 21 பேர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தபால் திணைக்களத்தில் கடந்த முதலாம் திகதி முதல் இருபத்தொரு பேருக்குத் தற்காலிக எழுதுவினைஞர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு ஒரு நாள் அறிமுகக் கருத்தரங்கும், கடந்த 1-ம் திகதி வடமாகாண அஞ்சல் அதிபர் நாயகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது

இக்கருத்தரங்கில் அஞ்சல் அலுவலக கணக்கியல் காரியாலய நடைமுறைகள், பிற திணைக்களங்களுடன் கொடுப்பனவுகள், காசுப் பதிவேடு பராமரித்தல் போன்ற விடயங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. (159)

## மாணவர் அறிவியல் கழகம் உதயம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் துணை அமைப்பாக "மாணவர் அறிவியல் கழகம்" உருவாக்கப்பட்டிருக்கின்றது. மாணவர் அறிவியற் கழகம் என்ற பெயரில் இந்த அமைப்பு இயங்கும். மாணவரின் அறிவியல் அடிப்படையிலான பார்வையைத் தூண்டுதலும் மேம்படுத்துதலும் என்ற இலட்சியத்தின் அடிப்படையில் கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த வாரம் முள்ளியவளை வித்தியானந்த கல்லூரி உப அதிபர் தலைமையில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் மாண அமைப்புப் பொறுப்பாளர் திரு. வே. அரவிந்தன் மாணவர் அறிவியல் கழகத்தினை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் கூறியதாவது:

உலகம் இன்று விஞ்ஞான, தொழில்நுட்ப ரீதியாக பலமடங்கு வளர்ச்சியடைந்து செல்கின்றது. நாம் வளர்ச்சியடையவில்லை. குறிப்பாக தமிழீழ மாணவரின் கல்வித்தரம், விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு அதிக வளர்ச்சியடையவில்லை. எனவே அறிவியல் துறையில் ஆர்வம் கொண்ட மாணவர்களை வளர்ப்பதற்கு மாணவர் அறிவியல் கழகம் தொழிற்படும்.

வளர்ந்து வரும் மாணவர்களை விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவு உடையவர்களாக வளர்க்க வேண்டும் என்பதே எமது தேசியத் தலைவரின் பெரும் விருப்பமாகும். இதனடிப்படையிலேயே "மாணவர் அறிவியல் கழகம்" உருவாக்கப்படுகின்றது எனக் கூறினார்.

முள்ளியவளை, வற்றாப்பளை றோ. க. த. க., குமுழமுனை அ. த. க. க, செம்மலை மகா வித்தியாலயம், ஒட்டிசுட்டான் மகாவித்தியாலயம், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், முல்லைத்தீவு மகா வித்தியாலயம், நெடுங்கேணி மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளிலும் மாணவர் அறிவியல் கழகம் அமைக்கப் பட்டுள்ளது.

மேற்படி பாடசாலைகளில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் ச. நாவண்ணன் முல்லைத்தீவு மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் நவீனன் ஆகியோரும் உரையாற்றினர்.

## இராசி பலன்

11-10-1992

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 25)

பூரணை ந. இ. 12-02 வரை, உத்திரட்டாதி மு. ப. 8-45 வரை, இராகுகாலம் மாலை 4-32 முதல் 6-02 வரை, சுப நேரம் காலை 9-02 முதல் 10-32 வரை, அமிர்தயோகம்.

மேடம்: ஏமாற்றப்படுதல், கெட்ட கனவு, வீண்கஷ்டம்.

இடபம்: தொழில் லாபம், நல்ல புகழ், பணவரவு,

மிதுனம்: நோய் குணமாகும், முயற்சி பலிதம் பயணம்.

கடகம்: பெண்களுடன் மனஸ்தாபம், அலைச்சல், வெறுப்பு.

சிங்கம்: சோகம், விரோதியால் பயம், பணமுடை.

கன்னி: மனபதட்டம், தொழில் சிறப்பு, நண்பர் உதவி.

துலாம்: வாகன சுகம், மரியாதை, குடும்பசந்தோசம்.

விருச்சிகம்: கீழ்படிதல், பணச்செலவு, குறைகேட்டல்.

தனுசு: நம்பிக்கைமோசடி, மனச்சஞ்சலம், சோம்பல்.

மகரம்: அதிகாரப் பதவி, வெகுமானம், முயற்சிவெற்றி.

கும்பம்: வயிற்றுவலி, பயணத் தடை, குடும்பப்பிரிவு.

மீனம்: சத்துரு ஜெயம், நற்பெயர், விருந்துண்ணல்.

— ஜோஸ்யர்

## சத்துணவுத் திட்ட செயல்முறை வகுப்பு

(நல்லூர்)

யாழ். மாநகராட்சி மன்றப் பிரதேசத்திலுள்ள பாலர் பாடசாலைப் பிள்ளைகள் சத்துக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

இதனை ஓரளவாயினும் நிவர்த்தி செய்யப் பாலர் பாடசாலைகளின் தாய்மாருக்கு உள்ளூரில் கிடைக்கக் கூடிய வளங்களைக் கொண்டு சத்துணவு தயாரிக்கும் வழிகள் பற்றிய செயல்முறைச் சுகாதாரக் கல்வி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

யூனிசெப் நிறுவன உதவியுடன் நடைபெறும் மேற்படி வகுப்புகள் அரியாலை காந்தி சனசமூக நிலையத்திலும், நெடுங்குளம் மகப்பேற்று நிலையத்திலும் இதுவரை நடாத்தப்பட்டுள்ளது என யூனிசெப் பிரதேச திட்டமிடல் அதிகாரி தெரிவித்துள்ளார். (158)

## ஆசிரியர்கள்சேவைக்காலகருத்தரங்கு

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம் 9, 10, 11 ஆம் ஆண்டு வகுப்புகளில் கணிதம் விஞ்ஞானம், தமிழ், சமூகக் கல்வி, சைவசமயம், வர்த்தகம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வட்டு இந்துக்கல்லூரியிலும். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும்(மருதனார்மடம்) சேவைக் கால கருத்தரங்குகளை நடாத்தவுள்ளது.

தினமும் காலை 8-30 மணி தொடக்கம் மாலை 4-30 மணி வரை இக்கருத்தரங்கு நடைபெறும் எனவும் இதில்கலந்து கொள்ளும் ஆசிரியர்களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கப் படுமெனவும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேல் தெரிவித்துள்ளார்.

வட்டு இந்துக் கல்லூரியில் இம்மாதம் 16, 17, 18 ஆம் திகதிகளில் கணிதம் 11, 12ல் விஞ்ஞானம், 11ல் தமிழ், 17, 18, 19 ல் சமூகக் கல்வி, 17, 18 சைவசமயம், 17ல் வர்த்தகம் நடைபெறும்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் (மருதனார்மடம்) 11 12 ல் கணிதம், 16 17, 18, இல் விஞ்ஞானம், 17, 18, 19 இல் தமிழ், 11 இல் சமூகக் கல்வி.

வர்த்தக பாடநெறி மூழுக் கோட்டத்திற்கும் 17 இல் வட்டு இந்துக் கல்லூரியில்மட்டும் நடைபெறும். (139)

# குமாரி கப்பலில் வந்த பொருட்கள்

[நெல்லியடி]

கொழும்பிலிருந்து பொருட்களை ஏற்றிக்கொண்டு திருமலை சென்ற 'குமாரி' கப்பல் நேற்றுக்காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இதில் கொண்டுவரப்பட்ட பொருட்களாவன:

அரிசி 205 மெ. தொன், சீனி 200 மெ.தொன், மா 1850 மெ தொன், ம எண். 152 பெரல், தே எண் 36 பெரல், டீசல் 22 பெரல், சோயாமீற் 1098 பை [10 மெ தொன்], பெ. சீரகம் 2 மெ. தொன், தீப்பெட்டி 2½ மெ. தொன், சவர்க்காரம் 3 மெ. தொன், சர்க்கரை 10 மெ. தொன், றைஸ் பிளேக்ஸ் 10 மெ.தொ. தபால் பை 547.

இவற்றுடன் இலங்கை பனை அபிவிருத்திச்சபைக்கும், யாழ் தலைமை அலுவலகத்திற்கும், யூ. என். எச். சீ. ஆர், போன்ற நிலைகளுக்கும் பொருட்கள் ஏற்றிவரப்பட்டுள்ளன. இவற்றை இறக்கும் பணிகள் உடன் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன (160)

# ★ மழைகாலத்திற்கு முன் விசேட கப்பல்கள் மூலம் உணவுப் பொருட்களை கொண்டுவர ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மழைகாலம் தொடங்குவதற்கு முன்னர் கொழும்பிலிருந்து விசேட கப்பல்களில் உணவுப் பொருட்களை முன்கூட்டியே இங்கு கொண்டுவருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யாழ் புனர்வாழ்வு பிரிவு அதிகாரிகள் எடுத்துள்ளார்கள்.

இந்த ஏற்பாடுகளை செய்வதற்காக மேற்படி பிரிவிலுள்ள இருவிசேட அதிகாரிகள் விரைவில் கொழும்பு செல்லவுள்ளார்கள்.

மழைகாலம் தொடங்கினால் பருத்தித்துறை துறைமுகத்தில் கொழும்பிலிருந்து கப்பல்மூலம் கொண்டுவரப்படும் பொருட்களை இறக்குவதில் பெரும் சிரமம் ஏற்படும் என்றும் கடந்த வருடம் மழைகாலத்தில் இந்த துறைமுகத்தில் உணவுப் பொருட்களை இறக்கும்போது இரு பாச்சுகள் பலத்த சேதமடைந்ததுடன் ஒரு பாச்சு முற்றாக உணவுப் பொருட்களுடன் கடலில் மூழ்கியது என்று யாழ். செயலக அதிகாரிகள தெரிவித்தார்கள். (வி)

# பௌதிகவியல் பரீட்சை வெளிநாடுகளிலும் நடைபெறும்

(கொழும்பு)

பரீட்சைத் திணைக்களத்தால் ரத்துச் செய்யப்பட்ட க பொ. த. உயர்தர பௌதிகவியல் II பரீட்சை இம்மாதம் 26ம் திகதி வெளிநாடுகளிலும் வைப்பதற்கு பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது: க. பொ. த. உயர்தரம் 1992ல் தோற்றிய அநேக பரீட்சார்த்திகள் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டார்கள். இவர்களுக்கு வாய்ப்பளிக்கும்முகமாக வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் இலங்கை உள்ளூர்நேரப்படி இப்பரீட்சை நடாத்தப்படும்.

வெளிநாடு சென்றுள்ள பரீட்சார்த்திகள் பற்றிய தகவல்களை இம்மாதம் 13ம் திகதி புதன்கிழமைக்கு முன்பு அதிபர்கள், பெற்றோர்கள், பாதுகாவலர்கள் பரீட்சைத் திணைக்கள மேலதிக ஆணையாளரிடம் சமர்ப்பிக்குமாறு பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் ஆர்தர் வெத்தமுல்ல தெரிவித்துள்ளார். (சு)

# கொழும்பிற்கு விமானம் மூலம் நோயாளிகள் செல்வர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தியசாலையில் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற சில நோயாளர்கள் கொழும்பு வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்காக உடன் அனுப்பும் முயற்சிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டுள்ளது.

இன்று அல்லது நாளை சில நோயாளர்களை குமாரி கப்பலில் ஏற்றிக்கொண்டு பலாலி சென்றதும் விமான மூலம் கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளதாக தெரியவருகிறது. (56)

# இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- சந்நிதிமடம் சிவகுருநாத குருபீட வேதாந்த மடத்தில் இன்று 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி ப 3மணிக்கு 'மேலைநாடுகளில் இந்துபண்பாடு' என்பது பற்றி இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் உரையாற்றுவார்.

★ ★

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த தீவக மக்களின் கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 10 மணியளவில் அத்தியடி புதிய வீதியில் உள்ள தீவக மக்கள் நலன்காக்கும் கழக தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும்.

தீவகத்தைச் சேர்ந்த(காரைநகர் உட்பட) ப நோ. கூ. சங்கம், சனசமூக நிலையங்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள் உட்பட பலர் இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது (க)

# பஞ்சாப்பில் எவ்வேளையிலும் கலவரம் மூளலாம்!

(சண்டிகார்)

பஞ்சாப்பில் எவ்வேளையிலும் கலவரம் மூளக்கூடிய அபாயநிலை தென்படுவதாகவும் எங்கும் பதற்றம் நிலவுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜெனரல் வைத்தியாவை கொலைசெய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அண்மையில் இரு சீக்கிய தீவிரவாதிகள் தூக்கிலிடப்பட்டதைத் தொடர்ந்தே இங்கு பதற்றநிலை உருவாகியுள்ளது.

பஞ்சாப்பில் பல்கலைக் கழகங்கள், தனியார் கடைகள் ஆகியன நேற்று மூடப்பட்டதாகவும் மூன்று நாட்கள் தொடர் வேலை நிறுத்தம் நடைபெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க]

# கொழும்பு நகரில் புதிய ஆயுதபாணிகள்

(கொழும்பு)

கொழும்பு நகரில் அண்மைக் காலமாக புதிதாக ஆயுதபாணிகளின் நடமாட்டம் பெருமளவில் அதிகரித்துள்ளதாக சிறிலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கடந்தசில வாரங்களாக கொழும்பு நகரில் பல இடங்களில் ஆயுதமுனைகளில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும், பலதாக்குதல்கள் நடைபெற்றதாகவும் பொலிஸ் புள்ளிவிபரமொன்று தெரிவிக்கிறது.

இவற்றைத் தடுக்க பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி

# ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வி. பு மாணவர் அமைப்பினால் நடாத்தப்படவிருந்த பாடசாலை மாணவர்களிடையேயான பேச்சு, பாட்டு போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர்களுக்கும், கொத்தனி அதிபர்களுக்கும், மாணவர்களுக்கும் வி. பு. மாணவர் அமைப்பு அறிவித்துள்ளது.

## மீனவர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேபோன்றதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளதும் படகிலிருந்த 8 பேர் கொண்ட இரண்டு மோட்டார் இயந்திரங்களை எடுத்து படையினர் கடலில் வீசியதும் குறிப்பிடத்தக்கது. [56]

## யாழ். குடாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்புப் பகுதிகளில் புலிகளின் தாக்குதல்கள் தீவிரமடையலாமென எதிர்பார்த்து யாழ். குடாவிலிருந்து பெருமளவு இராணுவ துருப்புகள் மேற்படி பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இப்பகுதிகளுக்கு இராணுவ தளபதிகள் பலரும் அடிக்கடி விஜயம் செய்து புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள் குறித்து ஆராய்ந்தும் வருகிறார்களாம்.

கடந்த இரு மாதத்தில் சுமார் 180 படையினர் வரை கொல்லப்பட்டுள்ளதாகவும் இது படையினருக்கு ஏற்பட்டுள்ள பெரும் இழப்பு எனவும் அவ்வட்டாரங்கள் கூறியுள்ளன. (சி)

## ஆனையிறவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரவு பகல் நேரங்களில் மேற்கொள்ளப்படும் இத்தாக்குதல்களால் புதுக்காடு, பளை பகுதியிலும் ஷெல்கள் வந்து வீழ்கின்றன. இதனால் இப்பகுதி மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

மேற்படி பகுதியை தாக்குதலற்ற பிரதேசமாக அரசு அறிவித்த அதேதினமும் ஆனையிறவு முகாமிலிருந்து கடும் ஷெல், துப்பாக்கி தாக்குதல் இடம்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி-156)

## கிளாலி கடலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடியதாக இருந்தது. காவல்துறையினர் சடலங்களை கடற்கரையில் புதைப்பதற்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிளாலிக் கடலில் வந்த பயணிகளை சுட்டுக்கொன்ற பின் படையினர் சடலங்களை படகுடன் சேர்த்து எடுத்துச் சென்றனர். பின் இச்சடலங்களை இவர்கள் கடலில் வீசிய போதே இவை கரை ஒதுங்கியுள்ளன. [156-சி]

## புலிகளின் தாக்குதலின

[1ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பும் ஹமில்டன் வனசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் கூட்டு இராணுவ நடவடிக்கைகள் தலைமை அமைப்பொன்று சிறப்பான இராணுவ அமைப்பாகவும் உருவாக்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கில் முப்படைகள்மீது கூட்டுப்படைத் தலைமையகம் முழு அதிகாரத்தையும் செலுத்தும் வகையில் தற்போது இராணுவ கட்டமைப்பு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இந்தப் பொறுப்பு ஜெனரல் வனசிங்காவிடமே இருந்தது. ஆனால் சிறிதுகாலத்துக்குமுன் முப்படைத் தளபதிகளின் வேண்டுகோளின் பேரில் இந்தப் பொறுப்பு அவரிடமிருந்து எடுக்கப்பட்டு முப்படைத் தளபதிகள்வசம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த ஆகஸ்ட் மாதம் அராலித்துறையில் இடம்பெற்ற கண்ணிவெடித்தாக்குதலின்போது மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ, லெப்டினன்ட் ஜெனரல் விஜய விமலரட்ண உட்பட ஒன்பது படை உயரதிகாரிகள் கொல்லப்பட்டதும் இந்தப் பொறுப்பின் தாக்கத்தை பாதுகாப்பு அமைச்சு அறிந்து கொண்டதாக ராணுவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்பிறகு இந்த மாதம் கட்டைக்காட்டில் படையினரின் ஆயுதக்கிடங்கு ஒன்றை புலிகள் கைப்பற்றியதையடுத்து பாதுகாப்பு அமைச்சு இதுவிடயமாக மிகவும் தீவிரமாக சிந்திக்க ஆரம்பித்தது எனவும் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சுக்கு மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்திய கெடுதியான இந்த இரண்டு சம்பவங்களின் பிறகே இந்தப் பொறுப்பு இப்போது ஜெனரல் வனசிங்காவிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கட்டைக்காட்டில் படையினரின் ஆயுதக்கிடங்கு புலிகளால் கைப்பற்றப்பட்டதன் விளைவாக இராணுவ உயர் பதவிகளிலும் பொறுப்புக்களிலும் மாற்றங்கள் வரும் என கடந்த 6ம் திகதி ஈழநாடு தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-சி)

# மூடப்பட்ட நிலையில் திருக்கேதீஸ்வர ஆலயம்

(திருமலை)

திருக்கேதீஸ்வரம் அருள்மிகு ஸ்ரீ சிவன் ஆலயம், பூசைகள் எதுவுமின்றி மீண்டும் பூட்டப்பட்டிருக்கிறது. இப்பகுதி மக்கள் நடமாட்டம் குறைந்த பகுதியாகவும் உள்ளது.

இவ் ஆலய மடங்களின் கதவுகள் உடைக்கப்பட்டுள்ளன. இப்பகுதி மக்கள் அச்சம் காரணமாக கட்டாடிவயல், பாப்பாமோட்டை போன்ற பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளதாக அங்கிருந்து கிடைத்த தகவல் மூலம்தெரிய வந்துள்ளது.

கடந்த பல மாதங்களுக்கு முன்னர் வெள்ளிக்கிழமையில் மட்டும் ஆலய பூசகர் இராணுவ ஜீப்வண்டியில் சென்று ஒரு நேரம் மட்டும் பூசை செய்துவந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. [154]

## புலிகள்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார்.

புலிகளின் இத்தாக்குதலில் இரு காவலரண்களும் பெருமளவில் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க]

## கிளாலி நோக்கி

[1ம் பக்கத் தொடர்ச்சி)

வேளை கடற்பரப்பிலிருந்தும் படையினர் பீரங்கி தாக்குதல மேற்கொண்டனர்.

இதேவேளை யாழ். பிராந்திய கடற்பகுதிகளில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கை தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாக அரசு நேற்று அறிவித்தது. (சி-க-156)

# இன்றைய உதைபந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் நடாத்தும் 7பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி மேற்படி மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

## போரை தொடர்வதற்கே

1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுடன் பேச்சுக்கள் எதனையும் அரசு நடத்தாதென ஜனாதிபதி அறிவித்துமுள்ளார். மேலும் புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்கு இன்னமும் காலம் தணியவில்லை என அரசு கருதுகிறது

இந்நிலையில் புலிகளின் கை ஓங்கி வருவதை ஏதேனும் ஒரு விதத்தில் கட்டுப்படுத்த இந்த மாற்றமாவது உதவாதா என பார்க்க அரசு நப்பாசை கொண்டுள்ளதாகவும் அந்த அவதானிகள் கூறியுள்ளனர். (சி)

## பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு அரசை சர்வதேச நாணய நிதியமும், உலககடன் வழங்கும் நிறுவனங்களும் வற்புறுத்துகின்றன.

ஆனால் ஆளும் ஐ. தே. க. வோ, தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிரச்னைக்கு தீர்வொன்றைக் காண்பதில் எதுவித அவசரத்தையும் காட்டுவதாகத் தெரியவில்லை என்றும் இந்து கூறியுள்ளது. (சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B / 10336/81.